விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 08 செவ்வாய்க்கிழமை (20.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 63

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ராம்கோ சீமெந்து

## பல்கலைக்கழக கற்றல் செயற்பாடுகளை தொடர முடியாத நிலையில் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தின் கற்றல் செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக நேற்றுக் காலை8.30 மணிக்கு யாழ்.பல்கலைக்கழகத்தின் பரமேஸ்வரன் ஆலயத்தில் பிரார்த்தனை நிகழ்வு இடம் பெற்றது.

இவ் பிரார்த்தனை நிகழ்வில் பல்கலைக்கழகத்தின் பதில் துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல் மற்றும் பீடாதிபதிகளும் ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை யாழ்.பல்கலைக்கழகத்தின் நான்காம் வருட கலைப்பீட மாணவன் கிருஷ்ணர் கமலதாஸ் நேற்று முன்தினம் சுட்டுக்கொல்லப்பட்டுள்ள நிலையில் அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ள மாணவர்களும் பீடாதிபதிகளும் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்க (04 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுவின் பணிகள் தொடர வேண்டும்

### அமெரிக்கா வலியுறுத்தல்

(கொழும்பு)

இலங்கையின் இனநெருக்கடியை முடிபுக்குக் கொண்டுவர பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வே ஒரே வழிமுறையென அழுத்தி உரைத்திருக்கும் அமெரிக்கா, நோர்வேயின் சமாதான முயற்சிகளும் சர்வதேச போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகளும் இலங்கையில் தொடர வேண்டுமென்ற உறுதியான விருப்பத்தையும் வெளியிட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை (04 ஆம் பக்கம் பார்க்க)

# ஒப்பந்தத்திலிருந்து விலகுவது குறித்து அரசு இதுவரை முடிபெடுக்கவில்லை

### அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதா? இல்லையா? என்பது குறித்து எந்தவிதமான தீர்மானத்தையும் அரசாங்கம் இதுவரை எடுக்கவில்லை. அரசாங்கம் தொடர்ந்தும் போர் நிறுத்த உடன்படிக்கையை கடைப்பிடித்து வருகின்றது.

அதற்கு உரிய கௌரவத்தையும் கொடுக்கின்றது என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளரும் அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளருமான பாலித ஹொகன்ன தெரிவித்தார். (04 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் கண்காணிப்புக் குழுவின் பிரதிநிதியை கூட்டமைப்பு நியமித்தது

(கொழும்பு)

மக்கள் கண்காணிப்பு குழுவிற்கு ஐக்கிய தேசியக்கட்சியும்,தமிழ்த் தேசிய கூட்டமைப்பும். தமது பிரதிநிதிகளை நியமித்துள்ளன. ஆட்கடத்தல்,காணாமற்போதல்,கப்பம் பெறுதல்,படுகொலைகள் ஆகியன தொடர்பாக ஆராயும் பொருட்டு மக்கள் கண்காணிப்பு குழு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிறேமச்சந்திரனும் ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்லவும் பிரதிநிதிகளாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மக்கள் கண்காணிப்பு குழுவின் ஏற்பாட்டாளரும் மேலக மக்கள் முன்னணியின் தலைவருமான (04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா-மன்னார் வீதியில் கிளைமோர்த் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் நேற்றுக் காலை இரு கிளைமோர் தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. வவுனியா-மன்னார் வீதியில் 21 ஆவது மைல் கல்லுக்கு அருகே வீதி ரோந்து மற்றும் காவல் பணிகளில் ஈடுபட்டிருந்த பொலிஸாரை இலக்கு வைத்தே இக்கிளைமோர்த் தாக்குதல் இடம் பெற்றுள்ளதுடன் துப்பாக்கிப்பிரயோகமும் இடம் பெற்றுள்ளது.

இத் தாக்குதல் பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளதாகவும் எனினும் இக் கிளைமோர் தாக்குதலில் பொலிஸாரிற்கு எதுவித உயிர்சேதமும் ஏற்படவில்லையென தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஏ)

## பாக். பாதுகாப்புச் செயலாளர் ஜனாதிபதி மகிந்தவுடன் சந்திப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு திடீர் விஜயமொன்றினை மேற்கொண்டு கொழும்பு வந்த பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தாரிக் வாசிம் காஸி நேற்று முற்பகல் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை அலரி மாளிகையில் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடாத்தியிருக்கின்றார்.

இந்த விஜயம் குறித்தோ அல்லது அச் சந்திப்புக் குறித்தோ உத்தியோகபூர்வமான செய்திக் குறிப்புக்கள் எதுவும் வெளியிடப்படவில்லை என்றாலும் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தாரிக் வாசிம் காஸி தலைமையிலான பாதுகாப்பு உயர் குழுவொன்று குறைந்தபட்சம் இரண்டு நாட்கள் விஜயம் ஒன்றினை மேற் கொண்டு இலங்கை வந்திருப்பதனை அரச உயர் வட்டாரங்கள் உறுதிப் (04 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையர் நால்வருக்கு சவுதியில் மரண தண்டனை

(கொழும்பு)

திருட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய இலங்கையர் நால்வருக்கு நேற்று சவுதி அரேபிய தலைநகர் ரியாத்தில் கழுத்து துண்டித்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாக ஏ.எப்.பி.தெரிவித்துள்ளது.

விக்டர் கோரிய, ரஞ்சித் டி சில்வா ,சந்தோஷ் குமார்,சாமிள சங்கித் குமார் ஆகியோரிற்கே இவ்வாறு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. இவர்கள் நால்வரும் ஆயுத முனையில் பல்வேறு வர்த்தக நிலையங்களில் திருட்டு செயலில் ஈடுபட்டுள்ளனர் என அந்நாட்டு ஊடகங்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன. (எ-1,3)

## உணவு நஞ்சாகியதில் 500 பேர் மயக்கம்

(கொழும்பு)

நோர்வூட் கொண் கொல தோட்டத்தில் உணவு நஞ்சாகியதால் 500 பேர் நேற்று முன்தினம் இரவு டிக்கோய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். தோட்டத்தில் அந்தோனியார் தேவாலய உற்சவத்தின் போது சமைத்து வழங்கப்பட்ட உணவினால் இச் சம்பவம் ஏற்பட்டுள்ளது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 500 பேரில் 200 பேர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர். ஏனையோர் வைத்திய சாலையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேவேளை குறித்ததினம் சமையல் செய்த 6 பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சமைத்து (04 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்த நிறுத்த ஒப்பந்தம் நீடித்தால் நாடளாவிய ரீதியில் போராட்டம்

### எச்சரிக்கிறது ஜே.வி.பி.

(கொழும்பு)

யுத்த நிறுத்த உடன்படிக்கை 22 ஆம் திகதிக்கு பின்னரும் நீடிக்கப்பட்டால் நாடு பூராகவும் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்படும் என ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கையை எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்பதாக ரத்துச் செய்து அந்த உடன்படிக்கையிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிவிடும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசாங்கம் விலகும்வரை நாங்கள் அதனை ரத்துச் செய்ய வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் போராடுவோம் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பிரதான வீதிகளை கடப்பதற்கு ஒரு மணிநேரம் காத்திருந்த மக்கள்

யாழ்.நகரின் பிரதான வீதியூடாக நேற்று பயணத்தை மேற்கொண்டோர் சுமார் ஒரு மணிநேரத்திற்கும் மேலாக வீதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இராணுவத்தினரின் வாகனப் போக்குவரத்து இடம் பெறவுள்ளதாகக்கூறி பலாலி வீதி ,ஆஸ்பத்திரி வீதி,கண்டிவீதி என்பவற்றினூடாக சென்ற பொதுமக்களை ஒழுங்கைகளுக்குள் ஒரு மணிநேரத்திற்கு மேலாக படையினர் தடுத்து வைத்திருந்தனர்.

இதனால் அரச உத்தியோகஸ்தர்கள், பாடசாலை மாணவர்கள் உட்பட அவசர தேவைகளுக்காக குறித்த வீதியூடாக சென்றவர்களும் வீதிகளைக் கடக்க முற்பட்டவர்கள் அனைவரும் ஒழுங்கைகளுக்குள் நீண்ட நேரம் காத்திருந்தனர்.

சிலர் தாம் சென்ற அவசர தேவையைப் பூர்த்தி செய்யாமல் வீதியை கடக்க முடியாத நிலையில் திரும்பிச் சென்றனர். ஆனால் அந்நேரத்தில் இராணுவ வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை நேற்று மாலை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட பின்னரும் பலாலி வீதியை கடக்க முயன்றோர் நீண்டநேரமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.


இதனால் பீதியுற்ற மக்கள் செய்வதறியாது திகைத்து நின்றனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

# இசற் ஸ்கோர் புள்ளிகள் வெளியானது

| | மருத்துவம் | பல் மருத்துவம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உணவும் ஊட்டச் சத்தும் | உயிரியல் விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் BIO. SC | பொறியியல் (MPR) | பொறியியல் (EM) | பொறியியல் (TM) | கனிய அளவீடு கட்டபொருளியல் | கணனி விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | நில அளவை விஞ்ஞானம் | பிரயோக விஞ்ஞானம் (Phy.sc) | முகாமைத்துவம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 1.8824 | 1.8810 | 1.8187 | 1.1140 | 1.5469 | 1.0573 | 1.0246 | 1.9080 | 1.8353 | 1.8855 | 1.8376 | 1.8058 | 1.1818 | 1.7106 | 1.1467 | 1.4166 |
| கிளிநொச்சி | 1.5258 | 1.4814 | 1.3570 | 0.8985 | 1.1008 | 0.7856 | 0.5401 | 1.2637 | 1.0869 | 1.2299 | 0.9409 | 0.8954 | 0.3842 | 1.1685 | 0.8188 | 1.1900 |
| முல்லைத்தீவு | 1.5853 | 1.5440 | 1.4808 | 0.7494 | 0.8045 | 0.2890 | 0.7299 | 1.2163 | 1.1863 | 1.1399 | 1.1066 | 0.5981 | 0.4411 | 0.8204 | 0.4280 | 1.0667 |
| வவுனியா | | | | | | | | | | | | | | | | |
| ஆதன மதிப்பீடு | வர்த்தகம் | கலை | கலை (SP) வெகுஜன ஊடகம் | கலை (SP) peforming | முகாமைத்துவ கற்கை நெறி (TV)-A | முகாமைத்துவ கற்கை நெறி (TV)-B | கட்டடக் கலைஞர் | வடிவமைப்பு | கட்டடம் | தகவல் தொழில் நுட்பம் | முகாமைத்துவமும் தகவல் தொழில் நுட்பமும் | பொது நிர்வாகம் | தொடர்பாடல் கல்வி | ஆயுர்வேதம் | அறுவைச் சிகிச்சை | உணவு விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் |
| 1.6888 | 1.3265 | 1.2727 | 1.1450 | 1.0860 | 1.3761 | 1.3206 | NQC | 1.0194 | 1.6723 | 1.8301 | 1.2425 | 1.7384 | 1.2499 | 1.0683 | 0.9433 | 1.7953 |
| 1.5964 | 1.1297 | 1.2712 | 1.1451 | 1.0860 | 1.1205 | 1.2656 | NQC | NQC | 1.2007 | NQC | NQC | 1.7914 | 1.2499 | 1.0683 | 0.9433 | 1.2332 |
| 1.0520 | 1.0362 | 1.1494 | 1.1451 | 1.0860 | 1.0174 | 1.1379 | NQC | NQC | 1.5565 | 1.4570 | 0.8957 | 1.1525 | 1.2499 | 1.0683 | 0.9433 | 1.0437 |
| 1.7645 | 1.4286 | 1.2727 | 1.1451 | 1.0860 | 1.4608 | 1.4526 | 1.3165 | NQC | 1.8710 | 1.4579 | 1.4861 | 1.8417 | 1.2499 | 1.0683 | 0.9433 | 1.6293 |
| சித்த வைத்தியம் | தாதி | தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பம் | விவசாய தொழில் நுட்பமும் முகாமைத்துவமும் | சுகாதார முன்னேற்றம் | மருத்தியல் | ஆய்வு கூட விஞ்ஞானம் | உடற்கல்வி | கைத்தொழில் புள்ளி விபரவியல் | புள்ளியியலும் குடிசார் ஆய்வும் | கடல்சார் உயிரியல் | விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் | கனணி விஞ்ஞானமும் தொழில் நுட்பமும் | விலங்கியல் விஞ்ஞானம் | சங்கீதம் (யாழ்பல்கலை) | நடனம் (யாழ்பல்கலை) | சித்திரமும் வடிமைப்பும் |
| 0.7490 | 0.5022 | NQC | 1.2507 | 0.5840 | 0.3674 | 0.6229 | 1.1049 | 0.6263 | 1.0124 | 0.4141 | NQC | 0.0262 | NQC | 0.5597 | 0.6411 | 0.4294 |
| 0.7490 | 0.2878 | NQC | 0.8930 | 0.4483 | 0.5568 | 0.6013 | 0.8108 | 0.9078 | 0.6938 | 0.4705 | NQC | NQC | NQC | 0.3414 | 0.4331 | NQC |

# வலிகாமம் கல்வி வலயத்தில் உதவிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்ற விஸ்வலிங்கம் பாலசிங்கம் அவர்களின் சேவை நலன் பாராட்டு விழா மலர்

## வாழ்த்துச் செய்தி




30 வருட சேவையில் உடற் கல்வி சார்ந்த ஆசிரிய ஆலோசகராகவும் உதவிக் கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்து அனைவரது அன்பையும் மதிப்பையும் பெற்ற வி.பாலசிங்கம் அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெற்றதின் பின் அவரது சேவையைப் பாராட்டு முகமாக வலிகாம வலய அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரினால் முன்னெடுக்கப்படும் சேவை நலன் பாராட்டு விழாச் செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைகின்றேன். இவர் வலிகாம வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகவும் உதவிக் கல்விப்பணிப்பாளராகவும் கடமையாற்றி நிறைவான பணியைச் செய்துள்ளார். உடற்கல்விப் போட்டியென்பது உணர்வுகளோடு சம்பந்தப்பட்டது. எனினும் அவரது அர்ப்பணிப்பான செயற்பாட்டினால் பணிகள் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்பட்டன இடைக்கிடையே சல சலப்புக்கள் ஏற்பட்டபோதிலும் சரியான அணுகுமுறையூடாக பிரச்சினைக்குரியதீர்வுகள் முன் வைக்கப்பட்டு நிர்வாகத்திற்கு எந்தவித சுமையும் கொடுக்காமல் சிறப்புச் சேவையாற்றியுள்ளார்.

மாகாணத்திற்கென நிரந்தர உடற்கல்விப் பணிப்பாளர் இல்லாத போது வி. பாலசிங்கம் அவர்கள் உட்பட பலரது ஒத்துழைப்போடு மாகாண நிலைப் போட்டிகள் முன்னெடுப்புச் செய்யப்பட்டன. பங்களிப்புச் செய்தவர்களில் இவரது பணியையும் மறக்க முடியாது. வலிகாம வலயம் தேசிய நிலை வரை பல்வேறு போட்டிகளில் சாதனை படைத்து அனைவரது கவனத்தையும் ஈர்த்து வருவது ஒரு சிறப்பான அம்சமாகும். அந்த வகையில் பங்களிப்புச்செய்தவர்களில் ஒருவராக வி.பாலசிங்கமும் கருதப்படுகின்றார். பாடசாலை, வலயம் ,மாவட்ட ,மாகாண போட்டிகளின் போது நல்லதொரு வழிகாட்டியாகத் திகழ்ந்த வி.பாலசிங்கம் அவர்கள் குடும்ப சகிதம் தேகாரோக்கியத்துடன் நீண்ட ஆயுள் பெற்று வாழ்ந்திட வாழ்த்துகின்றேன்.

வட மாகாணம் வீ.இராசையா
திருகோணமலை. மாகாணக் கல்விப்பணிப்பாளர்.

## 'கடமையை கண்ணைக் கொண்டு பணிபுரிந்த பாலா சேர்'



சேவை ஒன்றே நாட்டுக்கு என தேடிச் செல்பவர். தமிழ் மாணவரின் தேவைக்காக ஓடிவருபவர். கால்வலியோ மெய் வலியோ பாராது சேவை செய்பவர். தன் கடமைகளைச் செய்வதிலே சோர்ந்து போகாதவர். விளையாட்டுத்துறையை வளர்க்க வேண்டும் என்ற நோக்கை தன் கொள்கையாகக் கொண்டு சேவை புரிந்தவராகிய பாலசிங்கம் அவர்களை அவர் தம் சேவையிலே, சேவைக்கால ஆலோசகராக ஐந்து வருடங்களும் உதவி கல்விப் பணிப்பாளராய் எட்டு வருடங்களும் சேவையற்றியவர் ஆவார். அவருடைய சேவைக்காலத்தில் அவரின் வழி காட்டலில் கடமையாற்றிய பாக்கியம் எனக்கும் கிடைத்தது.

கடமையிலே கண்ணியமாகவும் கண்டிப்பாகவும் பழகுவதில் தந்தையாகவும் வழிகாட்டலில் உற்ற சகோதரனாகவும் இருந்து எம்மை நெறிப்படுத்தி தனது காலத்தின் பின்பும் சோர்ந்து விடாது விளை யாட்டுத்துறையை மேம்படுத்த வேண்டும் என்ற பெரு நோக்குடன் அறிவுரைகளும் ஆலோசனைகளும் வழங்கி கடமை, நேரம் தவறாமை, நேர்மையான செயற்பாடுகள் ,நிகழ்ச்சிகளைத் திட்டமிடல் ,தலைமைத்துவம்,தற்துணிவு, இசைவாக்கம், விடாமுயற்சி, செயற்திறன் போன்ற விடயங்களை மிகவும் அன்புடன் 'தம்பி நடா' என அழைத்து வழி காட்டிய அன்பு உள்ளம் கொண்ட 'பாலா சேரை' காலத்தாலும் அழிக்கமுடியாது. அவரின் காலத்தில் மூன்று உதவிக் கல்விப்பணிப்பாளரை உருவாக்கிக்கொடுத்தார். அவரின் பாதையில் விட்ட பணியினைத்தொட்ட பணியாகக் கொண்டு என் கடமையை செய்ய எல்லாம் வல்ல இறைவனை வேண்டி நிற்கின்றேன். எமது பாலசேரின் சேவை சிறந்து விளங்க அவரின் துணைவியார் திருமதி பா. செல்வராணியும் காரணகர்த்தாவாக துலங்கியுள்ளார். "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப் பொருள் மெய்ப் பொருள் காண்பதறிவு" என்ற குறளுக்கொப்ப தனது கடமையை நேர்மையான முறையிலே மேற்கொண்ட பெருந்தகையாளரான இவர் நீண்ட ஆயுளுடன் இரு பிள்ளைகளுடனும் துணைவியாருடனும் வாழ வேண்டும் என வாழ்த்தி அம்மன் அருள் வேண்டி நிற்கின்றேன்.

திரு.மு.நடராஜா, உடற்கல்வி
உதவிக்கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலயம்.



## உதவிக் கல்விப் பணிப்பாளர் விஸ்வலிங்கம் பாலசிங்கம் வாழ்க்கை/சேவை வரலாறு

பிறந்த இடம் :- வீமன்காமம் தெல்லிப்பழை
கல்வி கற்றது :- யா/ யூனியன் கல்லூரி
மனைவி :- திருமதி செல்வராணி
பிள்ளைகள் :- செல்வன் தர்சன் (மேல்படிப்பு, அவுஸ்ரேலியா மெல்பன் பல்கலைக்கழகம்)
செல்வன் நிசாகன் (மருத்துவபீடம் யாழ். பல்கலைக் கழகம்)

சேவை விபரம்:-

1. ஆசிரிய நியமனம் :- 03.05.1976 மன் / அடம்பன் மகா வித்தியாலயம் 31.12.1977 வரை
2. பலாலி ஆசிரியப் பயிற்சிக் கலாசாலை விஷேட பயிற்சி உடற்கல்வி 01.01.1978–31.12.1979 வரை
3. யூனியன் கல்லூரியில் ஆசிரியராக 01.01.1980–31.12.1993 வரை
4. ஆசிரிய ஆலோசகராக 01.01.1994 – 31.12.1998
5. உதவிக்கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) 01.01.1999 –27.08.2006 வரை

பொதுச்சேவை:-
யாழ். மாவட்ட துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவர்
யாழ்.மாவட்ட பாடசாலைகளின் விளையாட்டு செயலாளர்
மானிப்பாய் பரிஸ் லயன் கழக உறுப்பினர்


## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துச் செய்தி



புகழ் பூத்த விளையாட்டுத்துறைசார் அறிஞர் திருமிகு பாலசிங்கம் அவர்களை வாழ்த்துவதில் மிகவும் ஆனந்தமடைகின்றேன். வலிகாமம் கல்வி வலய விளையாட்டுத் துறை அதிபதியாக விளங்கி, அரிய பல சேவையாற்றியவர். நடுவுநிலை தவறாது நின்று விளையாட்டுப் போட்டிகளை நடத்தியவர். எவரையும் இன்முகத்தோடு அரவணைத்து ஆற்றுப்படுத்துபவர். அவரது மனைவியும் வைத்தியசாலையில் சிறந்த பணியாற்றியவர். அருமைப் புதல்வர்கள் கல்வியில் உயர்நிலை பெற்று நிறைந்த வாழ்வு வாழும் பேறு பெற்றுள்ளார்கள். சிறந்த பணியாற்றி ஓய்வுபெறும் நல்லாசானின் புகழ் என்றும் கல்வியுலகால் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

ஆறு. திருமுருகன்

## சகலதுறை விளையாட்டு வீரர்



ஓய்வுபெற்ற எமது வலய உடற்கல்வி உ.க.ப., வி.பாலசிங்கம் அவர்கள் சகலதுறை விளையாட்டுவீரர். அத்துடன் சகலவிளையாட்டுக்களையும் மத்தியஸ்தம் செய்யக் கூடிய அங்கீகாரம் பெற்றவர். குறிப்பாகத் துடுப்பாட்டத் துறையில் யாழ்ப்பாணத்தில் உயர்ந்த போட்டிகளுக்கு மத்தியஸ்தர்களில் ஒருவராகப் பணியாற்றி அனைவராலும் பாராட்டப்பட்டவர். அத்துடன் சிறந்த பயிற்றுவிப்பாளராகவும் திகழ்ந்தவர். யூனியன் கல்லூரியில் நீண்டகாலம் விளையாட்டுப் பொறுப்பாசிரியராகப் பணியாற்றியவர். இவர் எமது வலயத்திலும் கடந்த எட்டு வருடங்களாக உடற் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராகச் சீரிய பணியாற்றி ஓய்வுபெறும் வேளையில் வெளிவரும் பாராட்டு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருவகையடைகின்றேன். 2005 ஆம் ஆண்டு யாழ் .மாவட்ட விளையாட்டுத் துறையை வலிகாமம் கல்வி வலயம் பொறுப்பெடுத்து மிகச் சிறப்பாக அனைத்துப் போட்டிகளையும் நடாத்துவதற்கு வி.பாலசிங்கம் அவர்களின் விடா முயற்சியே காரணமாகும். அத்துடன் கூடைப்பந்தாட்டத்தினையும் பெண்களுக்கான கரப்பந்தாட்டத் தினையும் மாவட்ட விளையாட்டுப் போட்டிகளில் புதிதாக அறிமுகப்படுத்தினார். வரலாற்றில் முதற்தடவையாக இதே வருடம் யாழ். மாவட்டம் மாகாண நிலையில் விளையாட்டுப் போட்டிகளில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கிண்ணத்தினைச் சுவீகரித்ததோடு மாவட்ட நிலையில் வெற்றி பெற்ற வீரர்களுக்கும் யாழ். மாவட்ட விளையாட்டுக் குழுவின் அனுசரணையுடன் பரிசளிப்பு விழாவினை நடாத்தி ஊக்குவித்தார். ஓய்வு காலத்தில் இவர் சந்தோஷமாக நீண்டகாலம் நோய் நொடியின்றி வாழவும் குடும்பத்தில் நல்ல சிறப்புகள் கிடைக்கவும் வாழ்த்துகிறேன்.

ப.விக்னேஸ்வரன்
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம் கல்வி வலயம். வலிகாமம்.

## நலமே வாழ வாழ்த்துகிறேன்!



மனித ஆளுமை விருத்திச் செயற்கூறுகளில் கணிசமான. அளவு செல்வாக்குச் செலுத்துகின்ற விளையாட்டுச் செயற்துறைக்குப் பொறுப்பாக விளங்கி தனது நேரிய தலைமைத்துவத்தின் ஊடாக ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் நல்வழிகாட்டியாக விளங்கி ஓய்வுபெற்றுள்ள வி. பாலசிங்கம் அவர்களைப் பாராட்டுவதில் பெருமகிழ்வடைகின்றேன். ஏனைய சகல முகாமைத்துவப் பிரிவுகளினதும் வினைத்திறனைத் தீர்மானிக்கின்ற பிரதான காரணியாக விளங்குகின்ற நேரமுகாமைத்துவத்தினை முதன்மைப்படுத்தி பொறுப்புணர்வுடன் கூடிய கடமைக் கூறுகளைச் செம்மையுறச் செய்தவராவார். எவருடனும் எளிமையாகவும், அன்பாகவும், நட்புறவுடனும் பழகி கல்வித் தலைமைத்துவத்தின் இலக்குகள் உரிய காலத்தில் வெற்றிகரமாக முன் எடுக்கப்படுவதற்கு காரணகர்த்தாவாக விளங்கினார். மாகாண மட்டத்தில் வலிகாமம் கல்விவலயத்தின் பெயர் உடற்கல்வித்துறையில் பறைசாற்றப்படுவதற்கு முக்கிய காரணகர்த்தாவாக விளங்கியவர். இவரது எதிர் காலம் மனமகிழ்வுடன் நலமே அமைய வாழ்த்துகின்றேன்.

சு.சுந்தரசிவம்,
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

வாழ்த்துவோர்
உடற்கல்வி ஆசிரியர்கள்
வலிகாமம் வலயம்

(c-623)

மனிதன் ஒரு காரியத்தைச் செய்யும் போது, அது நற்செயலோ; தீயசெயலோ; தர்மநெறியில் நிற்பவன் செய்யத் தகுந்த காரியமா என்பதை மட்டும் பார்க்க வேண்டும்.

–சாக்கிரட்டீஸ்

வலம்புரி

## பிரித்தானியாவின் எச்சரிக்கையை ஏனைய நாடுகளும் பின்பற்ற வேண்டும்

அனைத்துலக விதிமுறைகளை மீறும் செயல்களிலும், தேவையற்ற இராணுவச் செலவீனங்களிலும் இலங்கை அரசு தொடர்ந்து ஈடுபட்டால் இலங்கைக்கான உதவிகளை நிறுத்தப் போவதாக பிரித்தானியா அறிவித்துள்ளது.

பிரித்தானியாவின் இவ்வறித்தல் இலங்கைக்கு நிச்சியம் கசப்பாகவே அமையும். இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் விடுதலைப்புலிகளுடன் பேசுவதற்கு தயாரென பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் அறிவித்தல் விடுத்த சில நாள்களில் இலங்கையை எச்சரிக்கை செய்யும் அறிவித்தல் வெளிவந்தமை புதிய திருப்பமாகவே கருதப்படும்.

இலங்கையில் தற்போது மனித உரிமை மீறல்கள் மிகவும் அதிகரித்துள்ளன. அனைத்துலக மனிதாபிமான விதிமுறைகள் அங்கு கடைப்பிடிக்கப்படுவதில்லை. இராணுவ நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டுள்ளதுடன் இராணுவ செலவீனங்களும் பெருமளவில் அதிகரித்துள்ளன என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள பிரித்தானிய அரசு, வறுமை ஒழிப்பிற்காகவும், சுனாமி மீள் நிவாரணத்திற்காகவும் தம்மால் வழங்கப்படும் நிதியுதவி அவற்றுக்கே பயன்படுத்தப்படும் என்ற உத்தரவாதத்தை எவ்வாறு பெற முடியும் என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

இவை இலங்கை அரசுக்கு நிச்சியம் தலையிடியைக் கொடுக்கும் என்பதற்கப்பால் இலங்கைக்கு உதவும் நாடுகள் பிரித்தானியாவின் அதேமுடிபை எடுக்கத் தயங்க மாட்டா என்பதும் தெளிவாகின்றது.

இலங்கைக்கு உதவி வழங்கும் ஒவ்வொரு நாடுகளும் பிரித்தானியா இப்போது எழுப்பிய சந்தேகங்களை, எச்சரிக்கைகளை முன்கூட்டியே விடுத்திருக்குமாகவிருந்தால் இலங்கையின் இனவிவகாரம் இத்துணை தூரம் ஊதிப் பருத்திருக்க மாட்டாது.

உலக நாடுகளிடமிருந்து பெற்றுக் கொள்கின்ற நிதியுதவிகள் இலங்கையின் அபிவிருத்திப் பணிக்கு பயன்படுத்தப்படாமல், ஆயுதக் கொள்வனவுக்கே பயன்படுத்தப்பட்டன என்ற உண்மையை உலக நாடுகள் இப்போதாவது புரிந்து கொள்ளும் என நம்பலாம்.

ஜூன், ஜூலை மாதப் பகுதியில் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் நடைபெறுவது வழக்கம். இக் கூட்டத்திற்கு முன்பாக இலங்கைக்கு வழங்கப்படும் நிதியுதவி தமிழ் மக்களுக்கு எதிரான இனப்போருக்கே பயன்படுத்தப்படும் என தமிழ்த் தலைவர்கள் குரல் கொடுப்பர்-

எனினும் அதனை உதவி வழங்கும் நாடுகள் கவனத்தில் எடுக்காமல் இலங்கை அரசு கேட்ட உதவித் தொகைக்கு மேலாக நிதியுதவியை வழங்கும். இதுவே கடந்த கால அனுகுமுறையாகவிருந்தது.

உலக நாடுகளிடம் பெற்றுக் கொண்ட நிதியுதவியைப் பயன்படுத்தி ஆயுதக் கொள்வனவு இடம் பெறும் வறிய நாடான இலங்கை தனது வறுமையைப் பயன்படுத்தி யுத்தம் நடத்திய கொடூரத்தை உலகில் வேறெங்கும் பார்த்துவிட முடியாது.

இதற்குள் இருக்கக் கூடிய இனவாதப் பேச்சுக்கள் உதவி வழங்கும் நாடுகளை உதாசீனப் படுத்தும் கருத்துக்கள் என எல்லாமுமே பொறுப்பற்ற முறையில் நடந்துள்ளன.

இப்போது ஜேர்மனியைத் தொடர்ந்து பிரித்தானியாவும் தனது உதவியில் நிபந்தனை விதித்துள்ளது. இது வரவேற்கத்தக்க விடயம் என்பதுடன் இலங்கை அரசை ஒழுங்குபடுத்தும் செயலாகவும் அமையும்.

## 10201 யாழ்.மாணவர்கள் கல்வியை கடந்த வருடம் இடைநிறுத்தியுள்ளனர்

யாழ்.குடாநாட்டில் கடந்த வருடம் 10 ஆயிரத்து 201 மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடந்த வருடம் ஓகஸ்ட மாதம் 11 ஆம் திகதிக்குப் பின்னர் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையே இதற்குக் காரணம் என கல்வித்துறை சார் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

குடாநாட்டில் கல்வி கற்கும் மாணவர்களில் ஏழு வீதமானோரே தமது கல்வியினை இடைநிறுத்தியுள்ளனர். யாழ்.குடாநாட்டில் ஏற்பட்டுள்ள பாதுகாப்புப்பிரச்சினைகள், இளைஞர்கள் கடத்தப்படுதல், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, பாடசாலை உபகரணங்களில் விலை அதிகரிப்பு என்பனவும் மாணவர்கள் தமது கல்வி நடவடிக்கைகளை இடைநிறுத்த காரணம் என கூறப்படுகின்றது.

ஆயிரக் கணக்கான குடும்பங்கள் தமது வருமானத்தை இழந்துள்ள நிலையில் அத்தகைய குடும்பங்களிலுள்ள மாணவர்களும் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது.

குடாநாட்டில் சுமுக நிலை ஏற்படாதவிடத்து மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்தும் சூழல் தொடருமென கல்வியியலாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (எ-1)

## ஊரடங்கு வேளையில் நடமாடிய 139 பேர் வலிகாமம் பகுதியில் கைது

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்குப் பின் ஊரடங்கு வேளையில் நடமாடிய 139 பேர் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மானிப்பாய்ப் பொலிஸ் பிரிவில் 78 பேரும் தெல்லிப்பழைப் பொலிஸ் பிரிவில் 23 பேரும் சுன்னாகம் பொலிஸ் பிரிவில் 17 பேரும் இளவாலை, அச்சுவேலி, வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுகளில் தலா 7 பேரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு அப் பகுதிப் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டனர்.

பொலிஸார் குறித்த நபர்களை மல்லாகம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர்படுத்தினர். குறித்த சம்பவங்களில் கைது செய்யப்பட்டவர்களில் மானிப்பாய்,வட்டுக்கோட்டை , இளவாலைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்தவர்களை இன்று வரைக்கும் விளக்க மறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

தெல்லிப்பழை மற்றும் சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை நாளை வரைக்கும் அச்சுவேலிப் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்தவர்களை வெள்ளிக்கிழமை வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு மல்லாகம் மாவட்ட நீதிமன்ற நீதிபதி திருமதி சறோஜினி இளங்கோவன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இதேவேளை யாழ்.பொலிஸ் பிரிவில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 20 பேரை யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிவான் இ.த.விக்னராஜா பிணையில் விடுதலை செய்ய பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1)

## கற்றல், கற்பித்தல் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களுக்கான கற்றல்,கற்பித்தல் தொடர்பான செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வில் சகல உள்ளகப் பயிற்சி ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு பீடாதிபுதி எஸ்.யோகநாதன் அறிவித்துள்ளார். (எ)

## கல்வி நிர்வாக சேவை மார்ச்சில் நியமனம்

(கொழும்பு)

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் III பதவி நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்தவர்களுக்கான நியமனங்கள் எதிர்வரும் மார்ச் முதலாம் வாரத்தில் வழங்கப்படவுள்ளன.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியோர் தொடர்பான தகவல்களை பரிசீலனை செய்வதில் மிகவும் கண்டிப்பான ஒழுங்கு விதிகள் கடைபிடிக்கப்படுவதால் நியமனம் வழங்குவதில் தாதம் ஏற்பட்டுள்ள்தாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியவர்கள் கல்வி அமைச்சில் சத்தியக் கூற்று சான்றில் 25 ரூபா முத்திரை ஒட்டி அதன் மேல் ஒப்பமிட்டு உறுதி செய்ய வேண்டும். (எ-5)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்ட மத்திய அரச ஊழியர்கள் சார்பிலான பிரச்சினைகள் சம்பந்தமாக கலந்துரையாடி அவசர முடிபு எடுக்க வேண்டியிருப்பதால் அவ் அரச ஊழியர்களை கச்சேரி வளாகத்தில் இன்று காலை 9 மணிக்குக் ஒன்று கூடுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (எ)

## 'தகவம்' இராசையா கொழும்பில் காலமானார்

(யாழ்ப்பாணம்)

பிரபல எழுத்தாளரும் கவிஞரும் விமர்சகரும் கொழும்புப் புனித பெனடிக் கல்லூரி ஆசிரியரும் முன்னாள் வானொலி மாமாவுமான வ.இராசையா கொழும்பில் காலமானார்.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் கொழும்பில் திறம்பட இயங்கி வந்த தமிழ்க் கலைஞர் வட்டம் (தகவம்) என்ற திறனாய்வு அமைப்பின் தலைவராகப் பணியாற்றிய இவர் எழுத்துத் துறையில் பல சாதனைகளைப்படைத்துள்ளார்.(து)

## பல்கலை மாணவர்கள் கப்பலில் பயணிக்க முடியும்

(வவுனியா)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கல்வி சார் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவிருப்பதால் வவுனியா வளாகத்தில் தங்களைப் பதிவு செய்த மாணவர்கள் கப்பலில் செல்வதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் செல்லும் பல்கலைக்கழக மாணவர்கள் திருகோணமலைப் பட்டணமும் சூழலும் பிரதேச செயலகத்துடன் உடன் தொடர்பு கொண்டு முன்னுரிமையைப் பெற்றுக் கொள்ளலாம் என வவுனியா வளாக சிரேஷ்ட உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (எ-1)

## மாணவன் கொலைக்கு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட 4 ஆம் வருட மாணவன் கிருஷ்ணன் கமலதாஸ் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டமைக்கு மாணவர் அமைப்புக்கள் கண்டனம் வெளியிட்டுள்ளன.

யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை மற்றும் யாழ்.மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கஜேந்திரன் ஆகியோர் மாணவனின் கொலையைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். (எ)

## உலக சாரணர் தினம்

(யாழ்ப்பாணம்)

உலக சாரணர் தினம் இன்று காலை 10 மணிக்கு யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது. அதிபர் செ.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வடமாகாண சாரண ஆணையாளர் த.நா.போஜன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்கின்றார். (எ)

## போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையின் வகுப்பு AI,ஆ பதவிக்கு உப அஞ்சல் அதிபர், சிற்றூழியர்களை ஆட் சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ்.மத்திய கல்லூரியில் நடை பெறவுள்ளதாக யாழ்.பிரதம தபாலதிபர் எஸ்.குமரகுரு தெரிவித்தார்.

இப் பரீட்சையில் தோற்றும் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டை நேற்று வரை கிடைக்கவில்லை எனவும் இன்று விசேட விமானம்மூலம் எடுத்துவரப்படலாம் எனவும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (எ-3)

✡ ✡ ✡

(யாழ்ப்பாணம்)

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு ஆங்கில ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான போட்டிப் பரீட்சை மற்றும் அதி சிறப்பு முகாமைத்துவ உதவியாளர் ஆட் சேர்ப்புப் போட்டிப் பரீட்சைகள் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வி.ரி.செல்வரத்தினம் தெரிவித்தார்.

கஷ்டப் பிரதேசப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கான ஆங்கில ஆசிரியர்களுக்கான போட்டிப் பரீட்சை 24 ஆம் திகதியும் அதி சிறப்பு முகாமைத்துவ உதவியாளர்களுக்கான போட்டிப் பரீட்சை 24 ஆம் திகதி; 25 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

எனினும் இதற்கான பரீட்சை அனுமதி அட்டைகள் இதுவரை கிடைக்கவில்லை என தெரிவிக்கப்பட்டது. (எ-3)

# பேச்சு மூலம் தீர்வு காண்பதற்கு போர் நிறுத்தம் மிகவும் அவசியம்

## ஐ.தே.கவின் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கருத்து

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கை தேவையா? இல்லையா? என்பதனை அரசாங்கமே தீர் மானிக்க வேண்டும். ஆனால் பேச்சுவார்த் தை மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு போர் நிறுத்தம் மிக முக்கி யமானதாகும்.

எனவே இந்த ஒப்பந்தம் மேலும் பலப் படுத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப் பாடாகும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கை முன் வைக்கப்பட்டு வருகின்ற நிலையில் அந்த உடன்படிக்கையில் அரசாங்கம் சார்பாக கைச் சாத்திட்ட கட்சி என்ற வகையில் ஐக்கிய தேசி யக்கட்சியிடம் கருத்துக் கேட்டபோதே திஸ்ஸ அத்தநாயக்க மேற்கண்டவாறு கூறினார்.

இவ் விடயம் குறித்து அவர் மேலும் கூறி யதாவது; வடக்கு கிழக்கில் யுத்த சூழல் நிலவிய நேரத்தில் சமாதானப் பேச்சுவார்த்தையை நடாத்தி பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண் பதற்காக உருவாக்கப்பட்ட ஒரு தற்காலிக ஒப் பந்தமே இந்த போர் நிறுத்த உடன்படிக்கை யாகும். இது எமது ஆட்சிக் காலத்தில் கைச் சாத்திடப்பட்ட உடன்படிக்கையாகும்.

போர் நிறுத்த உடன்படிக்கை வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கான தீர்வு ஒப்பந்தம் அல்ல என்பதனை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டு தரப்பினரின் இணக்கப்பாட்டு டன் போர் நிறுத்த உடன்படிக்கையில் காலத் திற்கு ஏற்றவாறான மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்பதனை எமது கட்சி ஏற்றுக் கொள்கின்றது.

அதேவேளை இந்த உடன்படிக்கை தேவை இல்லை என்றால் அதனை விட்டு விலகிவிடலாம். அதற்கான வழிமுறைக ளும் உள்ளன. போர் நிறுத்த உடன்படிக்கை தேவையா? இல்லையா? என்பதனை அர சாங்கமே தீர்மானிக்க வேண்டும்.

ஆனால் ,பேச்சுவார்த்தை மூலம் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு போர்நிறுத்தம் மிக முக்கியமானதாகும். எனவே குறிப்பிட்ட ஒப்பந்தம் மேலும் பலப் படுத்தப்படவேண்டும் என்பதே எமது நிலைப் பாடாகும். (ஏ-5)

# பல்கலைக்கழக மாணவன் கொலை பீடாதிபதிகள் அதிர்ச்சி; கவலை

கடந்த ஆறு மாத காலமாக முடங்கிப் போயிருந்த பல்கலைக்கழகக் கல்விச் செயற் பாடுகள் ஆரம்பமாகியிருக்கும் வேளையில் கலைப்பீட இறுதி வருட மாணவன் கிருஷ்ணன் கமலதாஸ் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அகாலமரணமடைந்த செய்தி எமக்கு அதிர்ச் சியையும் கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

மறைந்த மாணவனுக்கு அஞ்சலி செலுத் துவதுடன் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பல்கலைக்கழகம் சுமுகமாக நடைபெறு வதை பல்கலைக்கழக சமூகமும் பெற்றோர் களும் நலன்விரும்பிகளும் பெரு மகிழ்வோடு வரவேற்கின்றனர். திட்டமிட்டபடி பல்கலைக் கழக கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப் பட அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பை நாடி நிற்கிறோம் என பீடாதிபதிகள் கூட்டாக கையொப்பமிட்டு வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஏ)

## உணவு...

விநியோகிக்கப்பட்ட உணவின் மாதிரி சுகா தார திணைக்களத்தின் பகுப்பாய்வு பிரிவிற்கு சோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டுள் ளது. (ஏ)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் நாகநாதபிள்ளை பரமலிங்கம்,(நயினாதீவு)

(உரிமையாளர், லிங்கம் செரமிக்,யாழ்ப்பாணம்)



21.01.2007 இல் அமரத்துவமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் நாகநாதபிள்ளை பரமலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (20.02.2007) செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

அந் நிகழ்வில் பங்குபற்றி அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச்செய்தி கேட்டு வருகை தந்து, எங்கள் துயரில் பங்கு கொண்ட, பல வழிகளிலும் உதவிகள் புரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும், உள் நாட்டிலிருந்தும், வெளிநாடுகளிலிருந்தும், தொலைபேசி, தந்தி மற்றும் கடிதங்கள் மூலம் துயர் பகிர்ந்த அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

160, சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 222 7431

மனைவி,மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், குடும்பத்தினர்.

(C-620)


## யுத்த நிறுத்த ஒப்பந்தம்...

என்று ஜே.வி.பியின் கம்ப ஹா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

போர் நிறுத்த உடன்படிக்கையை எதிர் வரும் 22 ஆம் திகதிக்கு முன்னர் ரத்துச் செய்துவிடுமாறு ஜே.வி.பி.அரசாங்கத்தைக் கோரி வருகின்ற நிலையில் இவ் விடயம் குறித்து ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவிக் கையிலேயே விஜித ஹேரத் மேற்கண்ட வாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, போர் நிறுத்த உடன்படிக்கை யிலிருந்து அர சாங்கம் எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன் னதாக விலகிவிடும் என்பதே எமது எதிர்பார்ப் பாகும். அரசாங்கம் இவ் விடயம் தொடர்பில் உறுதியான முடிபை எடுக்கும் என்று எதிர் பார்க்கின்றோம்.

போர் நிறுத்த உடன்படிக்கையானது கைத்தவறுதலாக உருவாக்கப்பட்ட ஒரு விட யம் என்று அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் தெரிவித்திருந்தார். அப்படியா னால் ஏன் இன்னும் அரசாங்கம் அந்த உடன் படிக்கையை பாதுகாக்க வேண்டும். அர சாங் கம் உடனடியாக போர் நிறுத்த உடன்படிக்கையி லிருந்து விலகவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தி வருகின்றோம் என்றார். (ஏ-5)

## பிரதான...

நடுவீதியில் நிர்க்கதி யான நிலையில் தவித்த மக்களின் நிலை குறித்து யாழ். மாவட்ட நீதிவான் இ.த.விக்ன ராஜாவுக்கு தெரியப்ப டுத்தியதையடுத்து அவர் மக்களை போக்கு வரத்துக்கு உடனடி யாக அனுமதிக்குமாறு இராணுத்தினரைப் பணித்ததையடுத்து அவர்கள் தமது பயணத்தை தொடர அனும திக்கப்பட்டனர்.

ஊரடங்கு வேளையாக இருந்த போதிலும் மக்கள் தமது வீடுகளைச் சென்றடைந்தனர். தூர இடங்களுக்குச் செல்ல வேண்டியவர்கள் தமது உறவினர்கள் வீடுகளில் தங்கியிருந் ததைக் காணக்கூடியதாக இருந்தது. (ஏ-1)

## பாக்.பாதுகாப்புச் செயலாளர்...

படுத்தியுள்ளன.

இலங்கைக்கு இராணுவ உதவிகளை யும் இராணுவத் தளபாடங்களையும் வழங்கி வரும் மிக முக்கிய நாடுகளில் ஒன்றான பாகிஸ்தானுக்கான தனது விஜயத்தினை கடந்த வியாழக்கிழமை மேற்கொண்டிருந்த இலங்கை வெளிநாட்டமைச்சர் ரோஹித போகொல்லாகம அங்கு பாகிஸ்தான் ஜனா திபதி ஜெனரல் பர்வேஸ் முஷாரப்,பிரதமர் ஷோகட் அஸீஸ் மற்றும் வெளிநாட்டமைச் சர் குர்ஷிட் எம்.கசூரி ஆகியோரைச் சந்தித்து இரு நாடுகளுக்குமிடையிலான பரஸ்பர சமூக அரசியல்,பொருளாதார ,வர்த்தக , கலாசார மற்றும் இராணுவ நல்லுறவுகள் குறித்தும் அவற்றினை மேலும் மேன்படுத்து வது குறித்தும் கலந்துரையாடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஏ)

## மக்கள் கண்காணிப்புக்...

பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் இரு கட்சிகளின் தலைவர் களுக்கும் தனித்தனியாக கடிதங்கள் மூலம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைய இவர் கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழ் மக்களுக்கு எதிராக இடம் பெறும் பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பாக சர்வதேச சமூகத்தின் கவனம் திரும்பிவரு கின்ற வேளையில் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட ஐரோப்பிய ஒன்றியம் ஆசிய இணைத் தலைமை நாடுகள் தற்போது கண்டனங்க ளை வெளியிட்டு வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் மனோகணேசன் கூறியுள்ளார்.

இது மனித உரிமை மீறலுக்கு எதிராக தமது போராட்டத்திற்கு கிடைத்திருக்கின்ற பெருவெற்றி என சுட்டிக்காட்டியுள்ள அவர் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட் சியும் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் தத்தமது பிரதிநிதிகளை நியமித்துள்ளமை மகிழ்ச்சிக்கு உரியது என்றும் தெரிவித்துள்ளார். (ஏ-3)

## கண்காணிப்புக் குழுவின்...

களில் ஈடுபடுவதற்கு தயாராக இருப்பதாக பாலசிங்கனுக்கு மிகவும் நேச நாடான பிரிட்டன் அறிவித்திருக்கும் நிலையிலும், போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்து செய்து அனுசரணைப் பணியிலிருந்து நோர்வேயை வெளியேற்றுமாறு ஜே.வி.பி. தேசிய பிக்கு முன்னணி,ஜாதிக ஹெல உறு மய போன்ற சிங்கள கடும் போக்குக் கட்சி களும் அமைப்புக்களும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்குப் பெரும் நெருக்கடிகளை கொடுத்துவரும் வேளையிலும்;

உலக வல்லரசான அமெரிக்கா பேச்சு வார்த்தை மூலமே தமிழ் மக்களின் பிரச்சி னைகளுக்கு தீர்வு கண்டு மோதல்களை முடி வுக்குக் கொண்டுவருமாறு வலியுறுத்தியுள் ளது. சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு தற்சமயம் கைகூடியுள்ளது. அதிகா ரப் பரவலாக்கல் யோசனைகளை அரசாங் கம் ஆராய்ந்து வருகிறது.

எவ்வளவு துரிதமாக அரசியல் தீர்வுமுன் வைக்கப்படுகிறதோ அவ்வளவு தூரம் விரை வாக சமாதானப் பேச்சுவார்த்தைகளை சிறி லங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் ஆரம்பிக்க முடியுமென்று நாம் நம்புகின் றோம் என்று அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக் தெரிவித்தார்.

இலங்கையின் தற்போதைய சூழ்நிலை சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற் கான கள நிலைமை சர்வதேச சமூகத்தின் நிலைப்பாடுகள், மனித உரிமைகள் தொடர் பான பிரதிபலிப்புகள், தமிழ் மக்களின் நியா யபூர்வமான துயரங்கள் தொடர்பான அமெ ரிக்காவின் நிலைப்பாடு; இலங்கையின் ஊடக சுதந்திரத்தின் நிலைமை என்பன தொடர்பாக செவ்வி யொன்றை அளித்திருக் கும் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக், கிடைத்தி ருக்கும் அரிய சந்தர்ப்பத்தைத் தவறவிடா மல் உரிய முறையில் பயன்படுத்துவதிலே யே நாட்டின் வளமான எதிர்காலம் தங்கியி ருக்கின்றதெனத் தெரிவித்தார். (ஏ-5)

## பல்கலைக்கழக கற்றல்...

முடியாத நிலையில் உள் ளனர்.

கற்றலினைத் தொடர்வதற்கான இயல்பு நிலை தோற்றுவிக்கப்பட்டால் மாத்திரமே அதனைத் தொடர முடியுமென மாணவர் களும் பீடாதிபதிகளும் கூட்டாகத் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை பல்கலைக்கழகத்தின் வாயிலில் நேற்று கறுப்புக்கொடிகள் பறக்க விடப்பட்டு, அஞ்சலிப் பதாகைகளும் பல இடங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன. அஞ்சலிக்கூட்டமும் இடம் பெற்றது.

இந் நிலையில் பல்கலைக்கழகத்தின் முன்வாயிலில் பெருமளவு இராணுவத்தின ரும் பொலிஸாரும் குவிக்கப்பட்டிருந்தனர். தீவிர சோதனைகள் இடம் பெற்றதுடன் கறுப் புக்கொடிகள் பறக்கவிடப்பட்டதற்கான கார ணத்தினையும் இராணுவத்தினர் கேட்டறிந் துள்ளனர். (ஏ-3)

## ஒப்பந்தத்திலிருந்து விலகுவது...

எதிர்வரும் 22 ஆம் திகதிக்கு முன்னதாக அரசாங்கம் போர் நிறுத்த உடன்படிக்கையி லிருந்து விலகிவிடவேண்டும் என்ற கோரிக் கைகள் அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று கேட்டபோதே அவர் மேற்கண் டவாறு கூறினார்.

இவ் விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, போர்நிறுத்த உடன்படிக்கைக்கு ஐந்து ஆண்டுகள் பூர்த்தியடையவுள்ளதால் அதனை ரத்துச் செய்துவிடுமாறு கோரிக்கை கள் விடுக்கப்பட்டுள்ளன.

ஆனால், அரசாங்கம் இதுவரை போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து விலகுவதா? இல்லையா? என்பது குறித்தான எந்தவித மான தீர்மானத்திற்கும் வரவில்லை.

இவ் விடயம் குறித்து அரசாங்கம் இது வரை எந்த முடிபையும் எடுக்கவில்லை. அர சாங்கம் தொடர்ந்தும் போர் நிறுத்த உடன் படிக்கையை கடைப்பிடித்து வருகின்றது.

ஆனால், விடுதலைப்புலிகள் ஒப்பந்தத் தை மீறிவருகின்றனர். குண்டு வீச்சுக்களை மேற்கொள்கின்றனர். ஆயுதக்கொள்வன வுக்கான முயற்சிகளை மேற்கொள்கின்ற னர். இந் நிலையில் போர் நிறுத்த உடன் படிக்கை குறித்து அரசாங்கம் இதுவரை எந்தவிதமான முக்கிய முடிபுக்கும் வரவில் லை என்று மட்டுமே என்னால் கூற முடியும் என்றார். போர் நிறுத்த உடன்படிக்கையிலிருந்து அரசாங்கம் விலகவேண்டும் என்று தேசிய பிக்கு முன்னணி போராட்டங்களை நடத்தி வருகின்றது. அத்துடன் உடன்படிக்கையிலி ருந்து விலகாவிட்டால் போராடப் போவதாக ஜே.வி.பி.அறிவித்துள்ளது.

இந் நிலையில் அரசாங்கத்தின் வெளி விவகார அமைச்சின் செயலாளர் பாலித ஹொகன்ன இத்தகைய கருத்தினை தெரி வித்துள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஏ-1)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.